பக்கங்கள் : ஆறு

# உதயன்

Registered as

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 11 வெள்ளிக்கிழமை (25.05.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 179

# நெடுந்தீவுக் கடற்படைத் தளம் மீது புலிகள் தாக்குதல்!




யாழ்ப்பாணம், மே 25

நெடுந்தீவில் இருந்த இரண்டு கடற்படைத் தளங்களில் ஒன்றின் மீது - குயின்ராக் பகுதியில் உள்ள தளத்தின் மீது - தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை திடீர் தாக்குதலை நடத்தினர்.

அதிகாலை 1.20 மணிக்கு மேற்படி கடற்படைத் தளத்தை முற்றுகையிட்ட புலிகள், அதிகாலை 2.45 மணிக்கு அதனைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததாக அறிவிக்கப்பட்டது.

கடற்படையினர் கடந்த வருடம் புதிதாக அமைத்த கடற்படைத் தளம் மீதே புலிகள் நேற்றுத் தாக்குதல் நடத்தினர். நெடுந்தீவில் கடற்படைத் தளம் தாக்கப்பட்டதை அரச பாதுகாப்புத் துறையினர் உறுதி செய்தனர்.

(மேலும் படங்கள் உள்ளே)

## முற்றாக அழித்துவிட்டோம் 35 கடற்படையினர் பலி!

### விடுதலைப் புலிகள் அறிவிப்பு

கிளிநொச்சி, மே 25

நெடுந்தீவில் உள்ள கடற்படைத் தளங்களில் ஒன்று நேற்று தங்களால் வெற்றிகரமாகத் தாக்கி அழிக்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

கடற்புலிகளின் சிறப்புத் தாக்குதல் படகு அணிகள் நெடுந்தீவின் தெற்குப் பகுதியில் தரையிறங்கி, குறிப்பிட்ட முகாமை அதிகாலை 1.20 மணிக்கு முற்றுகை இட்டு தமது தாக்குதலைத் தொடங்கின -

நெடுந்தீவின் தெற்கு முனையில் உள்ள கோபுரத்தை மையமாக வைத்து அமைக்கப்பட்ட தளம் மீது கடற்புலிகள் பெரும் தாக்குதலை நடத்தி அதிகாலை 2.45 மணிக்கு அதனை முற்றாக அழித்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

தாக்குதலுக்கு இலக்கான கடற்படைத்தளம் இந்தப் பகுதியில் அண்மையில் தான் நிறுவப்பட்டது என்றும் கடல், வான்பிராந்தியங்களை கண்காணிக்கும் விசேட ராடர் கண்காணிப்பு மையமாக அது செயற்பட்டது என்றும் பாதுகாப்பு வட்டாரத் தகவல்களிலிருந்து அறிய முடிந்தது. (05ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதலை முறியடித்து மீண்டும் அங்கு நிலைகொண்டு விட்டோம்

### படைத்தரப்பினர் தகவல்

கொழும்பு, மே 25

கடற்புலிகளின் தாக்குதலை எமது கடற்படையினர் முறியடித்துவிட்டனர். கடற்படையினர் தரப்பில் 10 பேர் வரையானோரே உயிரிழந்திருக்கக் கூடும் - என்று பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

நெடுந்தீவில் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான கடற்படைப் பிரிவு மீண்டும் அந்த இடத்தில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. பாதுகாப்புத்துறைப் பேச்சாளர் நேற்று மாலை தெரிவித்தார். நெடுந்தீவு என்பது சுமார் 46இல் இருந்து 50 சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்டது.

அங்கு கடற்படையினரின் பல பிரிவுகள் உள்ளன. அவற்றில் தென்கோடிப் பகுதியில் உள்ள கடற்படைப் பிரிவு நேற்று அதிகாலை 1.15 மணிக்கு புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானது.

விடுதலைப் புலிகள் 18 படகுகளில் வந்து தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இவற்றில் 6 படகுகள் தற்கொலை குண்டுதாரிகளைக் கொண்ட படகுகள் என்று தற்போது தெரியவந்துள்ளது. (05ஆம் பக்கம் பார்க்க)



குண்டு வெடித்த பகுதியில் நீதிவான் விசாரணை

## கொழும்பு துறைமுகப் பகுதியில் இராணுவ பஸ் மீது குண்டுத் தாக்குதல்

### கோப்ரல் பலி! ஆறு பேர் காயம்!!

கொழும்பு, மே 25

தலைநகர் கொழும்பில் - கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த துறைமுகப் பிரதேசத்தில் - இராணுவத்தினர் பயணம் செய்த பஸ் ஒன்றின் மீது நேற்றுக்காலை குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. துறைமுகத்தின் மூன்றாவது நுழைவாயில் அருகே - இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த சக்தி வாய்ந்த கிளைமோர் குண்டு மூலம் நடத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படும் இத்தாக்குதலினால் இராணுவக் கோப்ரல் ஒருவர் உயிரிழந்திருக்கிறார். மூன்று படையினர் உட்பட ஏழுபேர் காயமடைந்திருக்கின்றனர்.

**றிமோட் மூலம் தாக்குதல்**

இது ஒரு தற்கொலைத் தாக்குதலா அல்லது வீதியோர கிளைமோர் வெடி குண்டுத் தாக்குதலா என்பது தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினர் ஆரம்பத்தில் குழப்பமுற்றிருந்தனர். எனினும், வீதியோரமாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றில் மறைத்து வைத்திருந்த குண்டே தொலைவில் இருந்து தூரக்கட்டுப்பாட்டு கருவி 'றிமோட்' மூலம் இயக்கி வெடிக்க வைக்கப்பட்டிருக்கிறது என்பது பின்னர் உறுதிசெய்யப்பட்டது.

நேற்றுக்காலை 8.45 மணியளவில் சுமார் 10 படையினர் வரை பயணம் செய்த (06ஆம் பக்கம் பார்க்க)

## றெக்கிளமேசன் பகுதியில் 12 தமிழர்கள் கைதாகினர்

கொழும்பு, மே 25

கொழும்பு, றெக்கிளமேசன் பகுதியில் நேற்று இடம் பெற்ற தாக்குதல் சம்பவத்தை அடுத்து தேடுதல் நடத்திய படையினர் 12 தமிழர்களைக் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதியில் தடைகள் போடப்பட்டு பெரும்தேடுதல் வேட்டை ஒன்றையும் படையினர் மேற்கொண்டனர்.

குண்டுவெடிப்பு இடம்பெற்ற பகுதி ஊடாகச் சென்றவர்கள் மற்றும் அந்தப் பகுதியில் உள்ள வர்த்தக நிறுவனங்களில் பணிப்புரிவோர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் சந்தேகத்தின் (05ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு இன்று வழமை போல்

யாழ்ப்பாணம், மே 25

இன்று வெள்ளிக்கிழமை இரவு 8 மணி தொடக்கம் நாளை அதிகாலை 4 மணிவரை ஊரடங்கு அமுலில் இருக்கும் என்று படைத்தரப்பு வட்டாரங்கள் நேற் றிரவு தெரிவித்தன.

எனினும், தீவுப் பகுதியில் நேற்று அமுல் செய்யப்பட்ட முழு நாள் ஊரடங்கைத் தளர்த்துவது குறித்து இன்று வெள்ளிக்கிழ மையே முடிவு செய்யப்படும் என்றும் அதே வட்டாரங்கள் தெரிவித்தன. அங்கு ஊரடங்கு மறு அறிவித்தல் வரை நடைமுறையில் (05ஆம் பக்கம் பார்க்க)

## பாலமோட்டையில் கிளைமோர்; இரு சிவிலியன்கள் உயரிழப்பு

### ஆழ ஊடுருவும் படையினர் கைவரிசை

கொழும்பு, மே 25

வவுனியா பாலமோட்டைப் பகுதியில் ஆழ ஊடுருவும் படையினரால் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் கிளைமோர் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆணும் பெண்ணுமாகிய சகோதரர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் பாலமோட்டை குஞ்சுக்குளம் பகுதியில் நேற்று முற்பகல் 9 மணியளவில் இடம்பெற்றது.

எறிகணைத் தாக்குதல் காரணமாக சொந்த இடத்தில் இருந்து வெளியேறிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இவர்கள் தங்களுடைய வீட்டினைப் பார்வையிடுவதற்காக மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தனர்.

அப்போது ஆழ ஊடுருவும் அணியினர் இவர்களின் மோட்டார் சைக்கிளை இலக்கு வைத்து தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களான செல்வராசா கோபி (வயது -24), செல்வராசா நதியா (வயது - 22) ஆகியோர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர். (சி)

## கண்காணிப்புக் குழுவின் தலைவர் இன்று கிளிநொச்சி செல்கிறார்

கிளிநொச்சி, மே 25

கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் சொல்பேர்க் இன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்கிறார்.

இன்றுகாலை தரைமார்க்கமாக கிளிநொச்சி வரும் அவர், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்துவார்.

போர்நிறுத்த உடன்பாடு, அண்மைக்காலத் தாக்குதல்கள் ஆகியன குறித்தே இன்றைய சந்திப்பின்போது பிரதானமாகப் பேசப்படும் என்று அறியவருகிறது. (அ-1)

## குடாநாட்டில் பாடசாலைகள் முழு அளவில் இயங்கின

யாழ்ப்பாணம், மே 25

குடாநாட்டில் நேற்றுப் பாடசாலைகள் முழு அளவில் இயங்கின. அனேகமாக நூறு வீத மாணவர்கள் பாடசாலைகளுக்குச் சமூகமளித்தனர்.

கடந்த பதினொரு நாள்கள் மேற்கொண்ட பகிஷ்கரிப்பு போராட்டத்தைக் கைவிட்டு பாடசாலை மாணவர்கள் நேற்று பாடசாலைகளுக்குச் சென்றனர்.

மாணவர்கள் மூவர் இரவு வேளையில் கடத்திப் பட்டமை, மாணவர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை ஆகியவற்றுக்கு (05ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## முக்கிய அறிவித்தல்

**46(1) பரிசோதனை/விசாரணை**

**உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்**

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சோவலஸ் கம்பனியின் ஏக விநியோஸ்தராக தொழிற்பட்டு அது தொடர்பான வியாபார நடவடிக்கைகளில் 46(1) பரிசோதனை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எனவே இந் நடவடிக்கை தொடர்பில் தகவல்கள் தர விரும்புவோர் எமது முன்னிலையில், வாரந்தோறும் வரும் வியாழன், வெள்ளி நாள்களில் மேற்குறித்த சங்க காரியாலயத்தில் தகவல்களை தந்துதவமுடியும். தகவல்களைக் கடிதம் மூலம் அனுப்புவோர், கூட்டுறவு அலுவலகம், 857, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திற்கு அனுப்பலாம்.

விசாரணை உத்தியோகத்தர்கள்:
சு.கணேசு (தலைமைக் காரியாலய பரிசோதகர்)
ந.ராஜா (தலைமைக் காரியாலய பரிசோதகர்)

கூட்டுறவு அலுவலகம்,
யாழ்ப்பாணம்
23.05.2007 (c/52479)

## தவறிவிட்டது

கேற்றோஸ், மிருசுவிலைச் சேர்ந்த மாப்பாணர் நாச்சிப்பிள்ளை அல்லது ஜயாத்துரை நாச்சிப்பிள்ளை என்பவருடைய தே.அ.அ. (இல.527802954), வி.அ.அட்டை என்பன யாழ். ஆஸ்பத்திரிக்கும் யாழ்.பஸ் நிலையத்துக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் V.M.K. ஜுவெல்லறியில் ஒப்படைத்து உதவவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (60916)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், சைவபோசனம். 1980இல் பிறந்த சித்திரை 3ஆம் கால், உயரம் 5'4½" கிரகபாவம், 24 உடைய பட்டதாரி ஆசிரிய மணமகளுக்குப் பெற்றோர், (உள்நாட்டில் (B.Sc. Teacher/ Engineer உயர் பதவியிலுள்ள) அல்லது வெளிநாட்டில் (London/ Canada) PR உள்ள கௌரவமான மணமகனை எதிர்பார்க்கின்றனர். விளம்பர இல. 2973 மே/பா உதயன். (60916)

## ஈராண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 01 - 08 - 1921



அம்பிகை அடியில் 17 - 05 - 2005

### அமரர் நாகமுத்தன் வீசுவலிங்கம்

(சமாதான நீதிவான் - நயினாதீவு, சைவப்புலவர், கலைஞானகேசரி, ஓய்வுபெற்ற அதிபர், பிரசித்த நொத்தாரிஸ், தீவுப்பகுதி மோட்டார் படகுச் சங்க ஸ்தாபகர், ஸ்ரீ நாகபூசணி அம்மன் யாத்திரீகர் தொண்டர் சபை ஸ்தாபகர், நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய முன்னாள் அறங்காவலர்)

திதி: வைகாசி பூர்வபக்க நவமி (25.05.2007)

*கண்ணையிமை காப்பதுபோல் காலமெல்லாம்*
*எமைக் காத்து*
*பண்போடு பாசம் படிப்பெல்லாம் எமக்கீந்து*
*எண்பத்தி நான்காண்டு இன்புறவே வாழ்ந்துவிட்டு*
*விண்ணாடு விரைந்தின்று ஈராண்டு*
*நிறைந்ததுவோ!*

ஆத்மசாந்திக்காக அம்பிகையை வேண்டுகின்றோம்.

5ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
- குடும்பத்தினர்.
(60876)

## 26ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் கலாநிதி

### ஆ.தியாகராசா

M.A., M.LITT.

(முன்னாள் தேசியப் பேரவை உறுப்பினர், முன்னாள் அதிபர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம், காரைநகர்)



பிறப்பு: 17-04-1916
இறப்பு: 25-05-1981

காலத்தை வென்றவர் காரைநகரில் உதித்தவர்
கண்ணியம் மிக்கவர் கடமையில் உத்தமர்
கல்விக்கு கடவுளவர் கருணையின் சின்னமவர்
கள்ளம் கபடமற்ற எம்குருவை காண்பதெப்போ?

உங்களை என்றும் மறவாத
மாணவன் **சி.சிவபாதம்**
(வங்கியாளர்)

'தவபவனம்'
பொன்னம்பலம் வீதி,
காரைநகர்.
(60673)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## திருமதி உமாதேவி நடராஜா

(ஆசிரியர், யா/இராமநாதன் கல்லூரி)

மலர்வு 29-10-1951

உதிர்வு 25-04-2007



அன்பின் உறைவிடமே!
பாசத்தின் பிறப்பிடமே!
குடும்பத்தின் குலவிளக்கே!
என்றுமே எமக்கென மெழுகாய் உருகியவளே!
இன்றுடன் முப்பத்தொன்று நிறைவானதே!
உம் இனிய வதனமுகமும் நினைவுகளும்
எம்மை விட்டு என்றுமே நீங்காது.

என்றும் உம் நினைவுகளுடன் துயருறும்:
கணவர், உடன்பிறப்புகள்,
பெறாமக்கள், மருமக்கள்.

சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

(60617)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் இப்போது கடும் வரட்சி; குடிதண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்த அறிவுறுத்து

குருநகர்,மே25

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் தற்போது கடும் வரட்சி நிலவி வருகின்றது. எனவே, குடிதண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு நீர் வழங்கல் வடிகால் சபையின் தீவகப் பொறுப்பாளர் விக்டர் ஜோர்ஜ் பெர்னான்டோ பிரதேச மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

குறிப்பிட்ட பிரதேசத்திற்கான குடிதண்ணீர் விநியோகத்தை நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையே மேற்கொண்டு வருகின்றது.

தற்போது பிரதேசத்தில் கடும் வரட்சி நிலவி வருவதால் குடிதண்ணீர் பெறும் கிணறுகளும் வற்றியுள்ளன. இதனால் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

எனவே, பிரதேச மக்கள் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு குடிதண்ணீரை வீண் விரயம் செய்யாது சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டும் - என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

கடும் வரட்சி காரணமாக நெடுந்தீவிலும் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவுகின்றது.

சாராப்பிட்டியில் உள்ள குழாய்நீர் விநியோகத்திட்டக் கிணறுகளில் நீர் மட்டம் குறைந்துள்ளதுடன் தண்ணீரும் உவர்த்தன்மை அடைந்துள்ளது. இதனால் பொதுமக்கள் கோட்டைக்காடு, சாராப்பிட்டியில் உள்ள சில நல்ல தண்ணீர்க் கிணறுகளை நாடிச் செல்வதைக் காணக் கூடியதாக உள்ளது.

தினசரி நீர் இறைப்பதாலும் தேவைக்கு மிஞ்சிய பாவனைக்கு குழாய் நீரைப் பொது மக்கள் பயன்படுத்துவதாலுமே குழாய் நீர் உவர்த்தன்மையடையக் காரணமாகிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேசமயம், இங்குள்ள குளங்களும் வரண்டு காணப்படுவதால் கால்நடைகளும் குடிதண்ணீரைத் தேடி அலைவதையும் காண முடிகிறது.

(202-51-111)

## மனநலம் குன்றியவரை அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே25

கைதடியில் இயங்கும் அரச முதியோர் இல்லத்தில் பராமரிக்கப்பட்டுவரும் மனநலங்குன்றியவரை அடையாளம் காண உதவுமாறு இல்லத்தின் அத்தியட்சகர் என். இராஜலிங்கம் கேட்டுள்ளார்.

கடந்த 16ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரி நோக்கி வந்த மினி பஸ் ஒன்றிலிருந்து சுமார் 30 வயது மதிக்கத்தக்க, கதைக்கமாட்டாத, மந்த புத்தியுள்ள வளர்ச்சி குன்றிய நபர் ஒருவரை முதியோர் இல்லத்திற்கு முன்னால் இறக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

அவர் சாம்பல் நிறச் சேட்டும் நீல நிறக் காற்சட்டையும் அணிந்திருந்தார். அவரை அடையாளம் காண்பதற்கு தேசிய அடையாள அட்டையோ அல்லது வேறு வித ஆவணங்களோ இருக்கவில்லை.

எனவே அவரை அடையாளம் காண உறவினர்கள் உதவவேண்டும் என்றும் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார். (202)

## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,மே25

யாழ்.மருத்துவ பீட மாணவர்களும் வடமராட்சி லயன்ஸ் கழகத்தினரும் இணைந்து நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணிவரை கொற்றாவத்தை பூமகள் சனசமூக நிலையத்தில் சலரோகக் கண்காட்சியையும் இலவச மருத்துவமுகாமையும் நடத்தவுள்ளனர். (203)

# மத்திய வங்கி அறிக்கையில் வடக்கு, கிழக்கு புறக்கணிப்பு

## அரசு தமிழீழத்தை அங்கீகரித்துவிட்டதா?

கொழும்பு,மே25

''மத்திய வங்கி வெளியிட்டுள்ள வருடாந்த அறிக்கையில் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் வடக்குக் கிழக்கைப் பிரித்து அரசு தமிழீழத்தை அங்கீகரித்துவிட்டதா?''

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நேற்றுமுன் தினம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் கேள்வி நேரத்தின் போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது ''1990 முதல் தனியார் முதலீடுகள், வெளிநாட்டவரின் முதலீடுகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வர்த்தகம், பெறப்பட்ட வெளிநாட்டு செலவாணி, பணமாற்றம் அதில் காணப்படும் அபிவிருத்திகள் குறித்து பிரதமர் இந்தச் சபையில் சமர்ப்பிக்கவேண்டும்''

-என்று கருணாநாயக்க கேள்வி ஒன்றை எழுப்பினார்.

பிரதமர் சபையில் இருந்தபோதும் ஆளும் கட்சிக் கொரடாவான ஜெயராஜ் பெர்னாண் டோபுள்ளே பிரதமரின் சார்பில் பதில் அளித்தார்.

அன்றைய அமர்வில் ரவி கருணாநாயக்கவுக்கும் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேக்கும் இடையில் கடும் வாய்த் தர்க்கம் ஏற்பட்டது.

ஒரு கட்டத்தில் -

இம்முறை வெளியிடப்பட்டுள்ள மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கைல் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் முற்றாகப் புறக் கணிக்கப்பட்டுள்ளன. அப்படியானால் அரசு தமிழீழத்தை அங்கீகரித்துவிட்டதா என்று ரவி கருணாநாயக்கா கேள்வி எழுப்பினார்.

''வடக்கு- கிழக்குமாகாணங்களில் இடம்பெறும் யுத்த சூழ்நிலைகள் காரணமாக வங்கி அதிகாரிகளுக்கு முழுமையான விவரங்களைப் பெறமுடியாமல் போய்விட்டது''- என அமைச்சர் ஜெயராஜ் கூறினார்.(சி)

## ஒய்வூதிய அலுவலருக்குத் தகுதிகாண் பரீட்சை

யாழ். மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலங்களில் பணிபுரியும் ஓய்வூதிய அலுவலர்களின் தகுதிகாண் தடைப் பரீட்சை நாளை சனிக்கிழமை யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் பரீட்சையில் தோற்ற விண்ணப்பித்தவர்களை அன்று பரீட்சைக்குச் சமூகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

அன்று முற்பகல்10 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் தாபன நியதியும் நிதி நிபந்தனையும் என்ற பாடமும் -

பிற்பகல் ஒரு மணிமுதல் 3 மணிவரையும் திணைக்கள கட்டளை நிபந்தனை என்ற பாடமும் இடம்பெறவுள்ளன.

இவர்களுக்கான அனுமதி அட்டைகளை அரச அதிபர் ஊடாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (203)

## அழகியற் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மே25

யாழ்.வலயப் பாடசாலைகளுக்கு இடையேயான அழகியற் போட்டிகள் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

நல்லூர், யாழ்ப்பாணக் கோட்டங்களுக்குரிய போட்டிகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் கோப்பாய் கோட்டப் போட்டிகள் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன என்று யாழ்.வலயக் கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது. (203)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே26

அராலி, ஆவரம்பிட்டி முத்துமாரி அம்பாள் ஆலய பெருந்திருவிழா இன்று வெள்ளிக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளது.

இன்றையதினம் ஆலய அறங்காவலரினால் அடியார்களுக்கு புதிதாக அமைக்கப்பட்ட அன்னதான மண்டபம் வழங்கப்படவுள்ளது. (203)

* * *

மாவிட்டபுரம், வீணியவரை இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் 30ஆம் திகதி வைகாசி விசாகப் பொங்கல் பெருவிழா இடம்பெறவுள்ளது. கண்ணகை அம்பாளுக்கு விசேட அபிஷேகம் பொங்கல் மடை என்பன நடைபெறவுள்ளன.

பக்தர்கள் தமது நேர்த்திக் கடன்களைத் தீர்ப்பதற்கு ஆலயத்திற்குச் செல்வதற்கெனப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர். ஆலயத்திற்குச் செல்ல விரும்பும் பக்தர்களை அன்று காலை 8.30 மணிக்கு முன்னர் தடை முகாமிற்கு வருகை தருமாறும் போக்குவரத்து ஏற்பாடு செய்யப்படவுள்ளதாகவும் ஆலய நிர்வாகஸ்தர் தெரிவித்துள்ளார். (203)

## மகளிர் சங்கத்துக்கு காணி அன்பளிப்பு

மாரீசன்கூடல், உயரப்புலம் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கென நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு பண்டத்தரிப்பு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் மூன்று பரப்புப் காணியை அன்பளிப்புச் செய்துள்ளது. அபிவிருத்திச் சங்கத்திற்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கென கெயர் நிறுவனம் 10 லட்சம் ரூபா நிதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-135)


## 75ஆவது பிறந்தநாள் வாழ்த்து

திகிரி, புலோலி கிழக்கு, பருத்தித்துறை
25.05.2007



**கதிரவேலு கோபாலபிள்ளை**

இவரை வாழ்த்துபவர்கள்:
கருணராஜா குடும்பம் (டென்மார்க்)
சிங்கராஜா குடும்பம் (லண்டன்)
சுரேஸ்குமார் குடும்பம்(டென்மார்க்)
சிவராசா குடும்பம் (சுவிஸ்)
விஜயரட்ணம் குடும்பம் (ஜேர்மன்)
உதயகுமார் குடும்பம் (பிரான்ஸ்)
செந்தில்ராசா குடும்பம் (இலங்கை)

புற்றளைப் பிள்ளையார் துணையுடன் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

(சி/52470) தகவல் : கோ.செந்தில்ராசா(மகன்)

## கொழும்பு - யாழ் - கொழும்பு விமான சேவை

*கொழும்பு - யாழ். விமானப் பயணிகளின் நலன் கருதிப் புதிய பயணிகள் விமான சேவை விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளது.*

*பொதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும். முன்கூட்டியே உங்கள் ஆசனங்களைப் பதிவுசெய்து கொள்ளவும் .*

*மேலதிக விவரங்களுக்கு:*

EURO GROUP
077 3846998
011 4542190

(சி/52441)

## வாழ்த்துகின்றோம்

2006 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்

| | | |
|---|---|---|
| செல்வன் துரைசிங்கம் கேஸ்ரீபன் | - | 152 |
| செல்வி தவராசா மதுவந்தி | - | 143 |
| செல்வி வசந்தகுமார் நிஷானி | - | 133 |

2006 க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்ற மாணவர்கள்

| | |
|---|---|
| செல்வி குமார் இராஜேஸ்வரி | (6ஏ, 2பி, 2சி) |
| செல்வன் சிவபாதம் நிதர்சன் | (4ஏ, 3பி, 2சி, எஸ்) |
| செல்வன் வரதராஜா புருசோத் | (4ஏ, 2பி, 3சி, எஸ்) |
| செல்வி மாணிக்கவாசகர் சுந்தர்ஜா | (3ஏ, 3பி, 3சி, எஸ்) |
| செல்வி உதயகுமார் விேனாஜா | (3ஏ, 3பி, 3சி, எஸ்) |

உட்பட 16 பேரையும்

2006 க.பொ.த. (உ/த) இல் சித்திபெற்றவர்களில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான

செல்வன் சிவபாதம் சஞ்சீபன்
செல்வி குணபாலசிங்கம் டெய்சிகா
செல்வி தெய்வேந்திரராசா சுகிர்தா
செல்வி சந்திரன் கஜிதா

ஆகியோரையும் மேலும் மேலும் உயர்ச்சி பெற இறை ஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம், யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.**

(60911)

## Certified Computer Accountant

Only one Authorized Tally Academy in Jaffna

பல்கலைக்கழக மாணவர்கள் ,HNDA ,HNDM,AAT ,CIMA, CMA , Charted (SL), HND (UK), NCAT, NCM, A/L வர்த்தக மாணவர்கள் மற்றும் கணக்கியலில் ஆர்வமுடைய அனைவருக்குமான கணக்கீட்டு மென்பொருள் கற்கைநெறி.

Tally ies 7.2
AIT 2007
முன்பு கல்விக்கு ஏற்றவேலை இனி வேலைக்கு ஏற்றகல்வி

Free Accountancy Intelligence Test

Tally Software-Accredited by The Institute of Chartered Accountants of England & Wales

30 நிமிடங்களில் 30 வணிகம் மற்றும் கணக்கியல் கேள்விகளுக்கு விடையளித்து 60% வரையிலான கட்டணக் கழிவைப் பெறுங்கள்.

பரீட்சை பற்றிய மேலதிக விபரங்களுக்கு எமது நிலையத்தை நாடுங்கள்.

CSC-ASIAN
COMPUTER EDUCATION
101,2[nd] மாடி ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு மேலாக)
Tel :021-222-8196

## தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீனம் சமயக் கல்விக் குழு

- தொடர் கருத்தமர்வு V - கிறிஸ்தவம்
- காலம் : நாளை (26.05.2007) சனிக்கிழமை காலை 9 மணி - 01 மணிவரை
- இடம் : யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவு, யாழ்ப்பாணம் (ஆஸ்பத்திரி முன்பாக)

விடயம் :
**பரீட்சை வினா - விடை**

- கருத்துரை வழங்குபவர்கள் :
திருமதி மல்லிகா (ஆசிரியை, யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி)
திருமதி அனிதா வெனிஸ்சியா (ஆசிரியை, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)
- 2007 ஓகஸ்ட் க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றும் சகல பாடசாலை மற்றும் தனியார் பரீட்சார்த்திகளையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
- பாடக்குறிப்புகள் இலவசமாக வழங்கப்படும்.

ஒருங்கிணைப்பாளர்,
சமயக்கல்விக் குழு,
[illegible]

(..363)

## புனித கென்றியரசர் கல்லூரி இளவாலை

## நூற்றாண்டு விழா (1907 - 2007)

இவ்விழா சனிக்கிழமை 2007 ஆடி மாதம் 14 ஆம் திகதி நடை பெறும். பழைய மாணவர்களும் நலன்விரும்பிகளும் பங்குபற்றுமாறு வேண்டிக் கொள்கின்றோம். விண்ணப்பப் படிவங்களை நிர்வாக அங்கத்தவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பழைய மாணவர் பொதுக் கூட்டம்

2007 ஆனி மாதம் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இப்பொதுக்கூட்டம் நடைபெறும். இதில் நூற்றாண்டு விழா பற்றிய கலந்துரையாடல் முக்கிய இடம்பெறும். அனைவரும் தவறாது பங்குபற்றவும்.

*தொடர்புகளுக்கு:*


| | |
|---|---|
| பேராசிரியர் K. பாலசுப்பிரமணியம் | 4590912 (H) |
| | 4590907 (O) |
| S.யோகதாஸ் | 2225368 |
| A.சௌந்தரநாயகம் (செயலாளர்) | 0776176703 |

**பழைய மாணவர் சங்கம், இளவாலை.**

(60891)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம், புங்கங்குளம்
# வில்வையடி
# ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய



## வருடாந்த பொங்கல் விழாச் சிறப்பிதழ்
## 25.05.2007

# வில்வையம்பதியில் வீற்றிருந்தே வினை தீர்க்கும் அன்னை

### அம்பாளின் அருட்பார்வை

யாழ்.குடாநாட்டில் புங்கங்குளப் பகுதியில் தோன்றி அருள் பாலிக்கும் அம்மன், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் அருள் ஆட்சியே ஆகும். ஆனால், இந்த புங்கங்குள அம்மனின் அருட்தோற்றம் நாட்டின் நிலையினால் ஏற்பட்ட தொன்றன்று. இற்றைக்கு சுமார் 41 வருடங்களுக்கு முன்னரே அம்பாளின் அருட்பார்வை இவ்விடத்திலே தோன்றியிருப்பதை அடியார்கள் அறிந்துகொள்வார்கள்.

### அம்பிகையின் அருட்தோற்றம்

அழகிய பெருந்தெரு, அதனை அண்டியிருக்கும் ஒரு புனிதமான குச்சொழுங்கை, அறிவும் ஆற்றலும் தெய்வீகமும் நிரம்பியிருக்கும் மக்கள் சூழ்ந்த அயல். இத்தனைக்கும் நடுவிலே அமைந்திருக்கும் அற்புத மரத் தோப்புக்கள். இதிலே உயர்ந்து ஓங்கி வளர்ந்திருக்கிறது அம்மனுக்குப் பிடித்தமான ஒரு வில்வமரம். இந்த மரத்தின் அடியிலேதான் அம்பாளின் வதிவிடம் தென்படலாயிற்று. அக்காலத்தில் இந்த வளவுக்குள் குடியிருந்த அடியவர்கள் அம்மனின் அருளையும் அருட்தோற்றத்தையும் அற்புதங்களையும் பல தடவைகள் கண்டு வியந்து தெய்விக மேலீட்டினால் அந்த இடத்திலே சிறியதோர் ஆலயத்தை அமைத்து ஆராதிக்க முற்படலாயினர். காலப்போக்கிலே அயலவர்களும் அண்டி வாழ்பவர்களும் அம்பாளின் அற்புதங்களினால் அம்பாள் அடியார்களாயினர். யாழ்.நகரிலே புங்கங்குளப் பகுதியிலே வில்வ மரத்தடியிலே அம்பாளின் வதிவிடம் மிகச் சிறியதானாலும் அம்பாளின் அற்புதங்களினால் இந்த ஆலயம் தெய்வீக நிலையினால் மிகமிக மேலோங்கியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயம்.



வில்வை மரத்தாளை வெவ்வினைகள் களைவாளை
அல்லும் பகலுமெங்கள் தொல்லையற அருள்வாளை
பொல்லா வினையகல புங்கங்குளத்தூர் புகுந்து
கல்லும் கசிந்துருக பாவிகள் நாம் பணிந்திடுவோம்.

### அம்பிகையின் தெய்வீகப் புதுமை

இந்த ஆலயத்துக்குள் பிரவேசித்ததும் அடியார்களுக்கு ஏற்படுகின்ற உணர்ச்சிப் பரவச நிலை. அம்பாளைத் தரிசிக்க வரும்போது காணக்கூடிய அற்புதக் காட்சிகள். அம்பாளுக்கு பூசைக்காக அடியார்கள் கொண்டுவந்து வைக்கின்ற பால், பழங்கள், மலர்கள் மறைந்து விடுகின்ற தன்மை. அடியார்களின் நடமாட்டம் இல்லாதபோது இங்கு நடக்கின்றதோர் இனந்தெரியாத தெய்வீக நடமாட்டம். அம்பாளுக்குச் செய்கின்ற நேர்த்திக்கடன்களினால் நோய், பிணி, தோசங்கள் நீங்கிவிடும் தன்மை. அத்தனைக்கும் மேலாக அம்பாளுக்கு முன்னால் வளர்க்கப்பட்டிருக்கும் தீக்குழம்பின் மேல் அடியார்கள் ஆரவாரம் இன்றி அமைதியாக நடந்து செல்லும் தெய்வீகம் என்பன அம்பாள் இந்த ஆலயத்தில் விரும்பி உறைகின்ற தன்மையையே வெளிப்படுத்துகின்றன.

### நம்பியே கைதொழுவோம் நாம்

அம்பாளின் வருடாந்தப் பொங்கல் தினம் இன்று வெள்ளிக்கிழமை ஆகும். அடியார்கள் அனைவரும் யாழ்.நகரில் புங்கங்குளம் பகுதி வில்வையடியிலே அமர்ந்து அருள்பாலிக்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் அருட்பெரும் தோற்றத்தை அணுகி பேரருள் பெற்று உய்வார்களாக!

'மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்'

அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாமே!
நம்பியே கைதொழுவார்க்கு பிணிநீங்கிடுமே!


## விழா சிறப்புற வாழ்த்துவோர்:

கட்டடப் பொருள்கள், உழவு இயந்திர, லாண்ட்மாஸ்ரர் உதிரிப்பாகங்கள் விநியோகஸ்தர்கள்
**கே.வயித்திலிங்கம் கொம்பனி**
38, 40, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 2075

றேடியோ, மணிக்கூடுகள், ரீ.வி., டெக் மற்றும் மின்சாரப் பொருள்களுக்கு
**சிவாஸ் சென்ரர்**
70, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
T.P.: 021 222 3884

கோயிலுக்குத் தேவையான பட்டு, சரிகைத் துணிகள், பட்டுவேட்டிகள், சால்வைகள் மற்றும் நவீன சாரி வகைகள் முதலியவற்றுக்கு நாடுங்கள்
**அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
54, பெரியகடை, யாழ்ப்பாணம்.

நவநாகரிக நங்கையர் விரும்பும் அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு உத்தரவாதம் மிக்க நம்பிக்கையான ஸ்தாபனம்
**சிறிநதியா நகைமாடம்**
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

வில்வையடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்
**கச்சான் பிஸ்கட்**
தயாரிப்பு: T.S. நாதன்
இல.96/1, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 2491

தரமான நல்ல பொருள்களை நீங்கள் நயமாக வாங்கிக்கொள்ள நாடுங்கள்
**புதிய முருகன் வணிக நிலையம்**
(நியூ முருகன் றேடர்ஸ்)
56A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

எல்லா அளவுகளிலும் நல்ல தரமான மரங்களை எந்நேரமும் சகாய விலைகளில் பெற்றிட நாணயம் மிக்க நிறுவனம்
**அன்னை மரக்காலை**
உரிமையாளர்: க.முருகேந்திரன்
176, ஆரியகுளத்தடி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

அழகுக்கு அழகுகூட்டும் தங்க ஆபரணங்களுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்
**அலங்கார் நகைமாளிகை**
21/7, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 2920

பவுண், பொன், வெள்ளி வாங்கவும் விற்கவும் நம்பிக்கையான ஸ்தாபனம்
**தம்பிப்பிள்ளையும் மைந்தரும் நகைமாடம்**
191 (343), கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

குளிர்பானம் தயாரிக்கும் தரமான பொருள்களுக்கு நம்பிக்கையான ஸ்தாபனம்
**ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசரிஸ்**
161, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 2219

தரமான குளிர்பான வகைகளுக்கும் ஐஸ்கிறீம் வகைகளுக்கும் நாடவேண்டிய இடம்
**ஐடியல் கிறீம் ஹவுஸ்**
458, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

புதுப்புது டிசைன்களில் ஒளிரும் நகைகளை ஒடருக்குப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
**சானுகா நகைமாடம்**
200G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 3700

மின் உபகரணங்கள், மின்சாரப் பொருள்கள் நியாய விலையில் பெற்றுக்கொள்ள
**அபிராமி எலக்றிக்கல்ஸ்**
62/31, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நவீன வடிவமைப்புக்களில் நவநாகரிக முறையில் அழகிய தங்க நகைகளை குறித்த தவணையில் செய்து பெற்றுக்கொள்ள
**பூரணி நகைமாடம்**
1/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 3121

அழகுக்கு மெருகூட்டும் அழகிய நகைகளுக்கு நம்பிக்கை வாய்ந்த நல்ல இடம்
**சோபனா நகைமாளிகை**
116V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நங்கையர் விரும்பும் நவீன டிசைன் நகைகளுக்கு நாட வேண்டிய இடம்
**சிறிஅமலா நகைமாளிகை**
74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 222 5800

நவீன டிசைன்களில் நாகரிகத்திற்கேற்ப தங்கப்பவுண் நகைகளை நயமாகச் செய்துகொள்ள
**சிறி மீனாட்சி ஜூவெல்லர்ஸ்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நல்ல குளிர்பானங்களுக்கும் ஐஸ்கிறீம் வகைகளுக்கும் சிறந்த இடம்
**நாகவி கிறீம் ஹவுஸ்**
133/10, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

நவீன வடிவமைப்புகளில் அழகிய தங்க நகைகளைச் செய்துகொள்ள நல்ல இடம்
**சிறி வெல்கம் நகைமாளிகை**
58, கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு
(சந்தனமாதா கோயில் அருகில்).

(#152474)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இலங்கைப் பிணக்கு விடயத்தில் மாறுகிறது சர்வதேசப் போக்கு

இலங்கை இனப்பிரச்சினைக்கான அமைதி முயற்சிகள் பின்னடைவு கண்டமைக்கு அது தொடர்பான விடயங்களைக் கையாண்ட சர்வதேச சமூகத்தின் பிழையான அணுகு முறையும் பிரதான காரணம் என்று இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக்காட்டி வந்திருக்கிறோம்.

சம்பந்தப்பட்ட இரு பிரதான தரப்புகளான இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சம தரப்பு அந்தஸ்தோடு அமைதி முயற்சிகளில் ஈடுபட இணங்கி, அதன் அடிப்படையில்தான் சமாதான எத்தனங்களை முன்நகர்த்தின என்பது வெள்ளிடைமலை.

ஆனால், காலப்போக்கில் சமதரப்பு அந்தஸ்து, விடுதலைப் புலிகளுக்கு மறுக்கப்பட்டு, அவர்கள் ஒதுக்கப்பட்டதால் அமைதி முயற்சிகள் தடங்கப்பட்டு முடங்கும் நிலைமை உருவாயிற்று.

புதிதாக ஆட்சிக்கு வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகள் (முதலில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையிலும் பின்னர் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலுமான அரசுகள்) அமைதி முயற்சிகளில் புலிகளின் சம அந்தஸ்துத் தகைமையை ஒருபுறம் மறுத்து நிராகரித்தன என்றால், மறுபுறம் சர்வதேச சமூகமும் அதே தவறை இழைத்து, அமைதி முயற்சிகள் தடைப்படக் காலாகியது.

அமைதி முயற்சிக்காலத்தில் தமிழீழ வி[illegible]தலைப் புலிகளைப் பயங்கரவாத இயக்கமாகப் பிரகடனப்படுத்தித் தடை செய்ததன் மூலம் அந்த சமாதான எத்தனங்களில் புலிகளுக்கு இருந்த சம அந்தஸ்துத் தகைமையைக் கெடுத்து, அமைதி முயற்சிகளைப் பாழடிக்க வழி செய்தது சர்வதேச சமூகம்.

அத்தவறு குறித்து இப்பத்தியில் பல தடவைகள் விளக்கமாகவும் விவரமாகவும் குறிப்பிட்டாயிற்று.

இப்போது அந்தத் தவறை சீர்செய்யும் வகையிலான புதிய போக்கு - கையாளுகை - சர்வதேச சமூகத்திடமிருந்து வெளிப்படத் தொடங்கியிருப்பது நல்ல அம்சமாகத் தோன்றுகின்றது.

இலங்கையில் சீர்கெட்டு வரும் மோசமான நிலைமை குறித்துக் கவலையும், விசனமும், கண்டனமும் தெரிவித்து வரும் சர்வதேச நாடுகள், இப்போதெல்லாம் இது தொடர்பான தமது கருத்துக்களை வெளியிடும்போது இலங்கை அரசையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும் ஒரே தராசில் வைத்து எடை போடுவது போலவே விடயங்களைப் பிரதிபலித்து வருகின்றன.

இலங்கையில் ஆட்கடத்தல்களும் நீதிக்குப் புறம்பான படுகொலைகளும் தினசரி இடம்பெறுவதாகச் சுட்டிக்காட்டியுள்ள ஆஸ்திரேலிய அரசு, இலங்கை அரசு மனிதாபிமானச் சட்டங்களை ஒழுங்குக் கிரமமாக மீறி வருகின்றது என்றும் குற்றம் சுமத்தியிருக்கின்றது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்ஸாண்டர் டௌனர் இலங்கை அரசு தொடர்பான தமது விமர்சனத்தைக் கடுமையாக்கியிருக்கின்றார் என ஆஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்திருக்கின்றது. அதுமட்டுமல்ல, இவ்விவகாரம் தொடர்பான தமது உரையில் இலங்கை அரசையும், விடுதலைப் புலிகளையும் வேறுபடுத்தாமல் - இரு தரப்புகளையும் ஒரே அந்தஸ்தோடு அணுகி - அவர் கருத்து வெளியிட்டிருக்கின்றார் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

சர்வதேச மன்னிப்புச் சபை தொடக்கம் ஐ. நா. மனித உரிமைகள் அமைப்புகள் வரை சர்வதேச பொது அமைப்புகளாகட்டும் - அமெரிக்கா முதல் பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், அத்தோடு அண்டை நாடான இந்தியாவரை சர்வதேசமாகட்டும் - இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் குறித்துக் கருத்து வெளியிடும்போது அல்லது கண்டன, விமர்சன அறிக்கைகளை முன்வைக்கும் போது, பிணக்கில் சம்பந்தப்பட்ட இலங்கை அரசு மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பினரையும் சம அந்தஸ்துக் கொடுத்து - சம தரப்புகளாகக் கருதி - இரு தரப்பையும் அணுகுகின்ற புதிய போக்கு இப்போது தென்படுகின்றது.


தன்னை சட்டபூர்வ - இறைமையுடைய - அரசு என்று கூறிக்கொள்ளும் இலங்கையை, புரட்சிப் போக்குடைய - ஆயுதம் தரித்த எதிர்ப்பியக்கம் ஒன்றை நடத்தும் - விடுதலைப் புலிகளுடன் சமநிலையில் வைக்கும் - கருதும் - போக்கை சர்வதேசம் கையாளும் புதிய நிலைமை அதிபர் மஹிந்த ராஜபக்ஷவின் நிர்வாகம் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பைக் கையேற்றதை அடுத்து உருவாகியிருக்கின்றது.

தமிழர்களின் நியாயமான - நீதியான - சட்டபூர்வமான - அபிலாசைகளைக் கவனத்தில் எடுக்க மறுத்து, பௌத்த - சிங்கள பேரினவாத மேலாண்மைச் சிந்தனையோடு விடயங்களை அணுகி, தமிழர்களின் உரிமைப்போரை ஆயுத வழியில் அடக்குவதற்கு அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டதன் மூலம் நாட்டுக்கு இந்தக் 'கீர்த்தியை' பெற்றுக் கொடுத்திருக்கின்றது மஹிந்தரின் தலைமையிலான ஆட்சி.


மஹிந்த ராஜபக்ஷவை 'யதார்த்தவாதி' என்று - சித்திரித்து, அவர் ஆட்சிப்பீடம் ஏற, விடுதலைப் புலிகளின் தலைமை மும்முரமாக உழைத்ததன் பயனை, இப்போது புலிகள் அறுவடை செய்யத் தொடங்கிவிட்டனர் என்றே தோன்றுகின்றது.

சர்வதேச மட்டததில் இலங்கை அரசின் கீர்த்தியும் பெருமையும் (?), கொடிகட்டிப்பறக்கத் தொடங்கியிருப்பதன் மூலம் இது நிரூபணமாகி வருகின்றது.





நேற்றைய கடற்படைத் தளம் மீதான தாக்குதலின் போது கடற்புலிகள் அணி தரையிறங்கு வதையும் பின்னர் திரும்பிச் செல்வதையும் மேலேயுள்ள படங்களில் காணலாம்.



நேற்றைய தாக்குதலில் விடுதலைப் புலிகள் தாம் கைப்பற்றியதாக, காட்சிக்கு வைத்திருக்கும் ஆயுதங்கள்.

# புலிகளின் மட்டரக இலகு விமானங்களை தாக்கியழிக்க பலநூறு கோடி ரூபா செலவில் 'மிக்-29' வாங்குவதா?

## நிதியை அரசு வீண்விரயம் செய்வதாக ஐ. தே. கட்சி சாடல்

கொழும்பு, மே 25

''தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானப்பலத்தை முடக்குவதற்கு போர் விமானங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டியது அவசியம் தான். ஆனால், அதற்காக புலிகளின் இலகு ரக விமானங்களைத் தாக்கியழிப்பதற்கு 800 கோடி ரூபா செலவழித்து 'மிக்-29' ரக போர் விமானத்தைக் கொள்வனவு செய்ய அரசு தீர்மானித்திருப்பதை ஐக்கிய தேசியக் கட்சி வன்மையாக எதிர்க்கின்றது''.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

புலிகளின் விமானத் தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை - பிரேரணையை சபையில் சமர்ப்பித்து அதன் மீதான விவாதத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

புலிகள் மேற்கொண்ட விமானத்தாக்குதலையடுத்து புலிகளின் விமானங்களைத் தாக்கியழிப்பதற்காக அரசு 'மிக் - 29' ரக போர் விமானத்தைக் கொள்வனவு செய்யத் தீர்மானித்திருக்கிறது.

புலிகள் விமானத்தாக்குதல் நடத்துவதற்கு முன்னரே புலிகளிடம் விமானங்கள் இருக்கின்றன என்று அரசு அறிந்திருந்த நிலையில், மேற்படி பதில் தாக்குதலுக்கான விமானங்களை அரசு கொள்வனவு செய்யாது என்று பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளம் செய்தி வெளியிட்டிருந்தது.

ஆனால் புலிகளின் விமானத் தாக்குதல்களைத் தொடர்ந்து 'மிக் - 29' ரக விமானத்தைக் கொள்வனவு செய்ய அரசு தீர்மானித்திருப்பதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது. இது அவசரத் தீர்மானம் இல்லையென்றும் நீண்டகாலத்திட்டத்தின் ஓர் அங்கமே என்றும் ஜனாதிபதி செயலகம் மேலும் கூறுகிறது.

### கொள்வனவு குறித்து முரண்பட்ட அறிக்கைகள்

ஜனாதிபதி செயலகத்தின் அறிக்கையும் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு நிற்கின்றன. 'மிக்' கொள்வனவு நீண்டகாலத் திட்டம் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவிக்கின்ற நிலையில் பாதுகாப்பு அமைச்சு அப்படியேதும் தீர்மானம் இல்லை என்று தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் 'மிக்' கொள்வனவு செய்வதில் அரசு உறுதியாக இருப்பது இப்போது தெரியவருகின்றது.

இந்த 'மிக் - 29' ரகத்தின் விலை 800 கோடி ரூபா. கேள்விப்பத்திரம் கோரப்படாமல் இதை வாங்க அரசு தீர்மானித்திருப்பதன் மூலம் அது பாரிய மோசடியில் ஈடுபடப்போகின்றது என்பது தெளிவு.

டிசம்பரில் அரசால் 'மிக் - 27' ரக நான்கு விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டபோது கோடிக்கணக்கான ரூபா மோசடி இடம்பெற்றதாக முன்னாள் அமைச்சர்கள் மங்கள சமரவீர மற்றும் சிறிபதி சூரியாராய்ச்சி ஆகியோர் லஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்துள்ளனர். அதேபோல் இப்போது 'மிக் - 29' ரக விமானம் கொள்வனவு செய்ய இருப்பதன் மூலமும் மோசடி இடம்பெறவுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### 'மிக் - 27' விமானங்கள் இரண்டு பழுதடைந்துவிட்டன

ஏற்கனவே கொள்வனவு செய்துள்ள நான்கு 'மிக் - 27' ரக விமானங்களில் இரண்டு பழுதாகி உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

உண்மையில் புலிகள் வசம் இருக்கும் விமானம் மிகவும் இலகு ரகமானது. வெளிநாடுகளில் தோட்டப் பண்ணைகளில் பயிர்களுக்கு கிருமிநாசினிகள தெளிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் மட்ட ரகத்தைச் சேர்ந்தவை.

இந்த விமானத்திற்குப் பயந்து அதைத் தாக்கியழிக்க 800 கோடி ரூபா செலவில் போர் விமானங்களைக் கொள்வனவு செய்ய அரசு தீர்மானித்திருப்பதை ஏற்க முடியாது - என்றார். (சி)

## ஊரடங்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கும் என்றே நேற்று அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

குடாநாட்டின் கடந்த பல நாள்களாக தொடர்ந்து ஊரடங்கு நேரம் இரவு 8 மணியிலிருந்து அதிகாலை 4 மணி வரையாக இருந்தது.

எனினும் ஊரடங்கு நேற்று மாலை 5 மணிக்கு அமுலுக்கு வருவதாகப் பரவிய தகவலைத் தொடர்ந்து மக்கள் பெரும் சிரமப்பட்டனர். பலர் தமது அலுவல்களை விட்டு விட்டு அவசர அவசரமாக வீடு திரும்பினர். ஆனால் நேற்று இரவு எட்டு மணிக்கே ஊரடங்கு அமுலுக்கு வருவதாகப் பின்னர் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## றெக்கிளமேசன்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரில் 12 பேர் மேல் விசாரணைக்காக பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (அ-1)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி - 12 | சனிக்கிழமை 26.05.2007 |
| திதி: தசமி | முன்னிரவு : 10.09 |
| நட்சத்திரம்: | உத்தரம் முன்னிரவு : 08.02 |
| [illegible] | : 02.52 - 04.22 |
| [illegible] | : 08.52 - 10.22 |

## தாக்குதலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

### எதிர்கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டது

கடற்படையின் டோறாப் படகுகளும் மற்றும் விரைந்து சென்று தாக்கும் படகுகளும் புலிகளின் படகுகளை எதிர்கொண்டு தாக்குதல்களை நடத்தின. கடற்படையினர் இந்த மோதலில் புலிகளின் இரண்டு படகுகளை முழுமையாக அழித்துவிட்டனர்.

### கடற்புலிகளின் படகுகளை விமானங்கள் அழித்தன

புலிகளின் படகுகள் திரும்பிச் செல்லும்போது அந்தப் படகுகளை விமானப் படை விமானங்கள் இடை மறித்து குண்டு வீசி இரண்டு படகுகளை அழித்துள்ளன. மேலும் இரண்டு படகுகள் சேதமாகியுள்ளன.

கடற்படைப்பிரிவு மீண்டும் அந்த இடத்தில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது - என்று பாதுகாப்புத்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## குடாநாட்டில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்ப்புத் தெரிவித்து, பாட சாலை மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்தனர்.

இந்தப் பகிஷ்கரிப்பு போராட்டத்தை தற் காலிகமாக நிறுத்துவதாக தமிழ் மாணவர் ஒன்றியம் அறிக்கை மூலம் அறிவித்ததை அடுத்து, மாணவர்கள் பகிஷ்கரிப்பு போராட்டத்தைக் கைவிட்டு, பாடசாலைகளுக்கு நேற்று முழு எண்ணிக்கையில் சமுகமளித்தனர். (அ-1)

## முற்றாக....

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

தொடர்ச்சியாக கடற்புலிகள் கடற்படைத்தளத்தின் மீது தீவிரமாக நடத்திய தாக்குதலையடுத்து அதிகாலை 2.45 மணிக்கு தளத்தை முற்றாகத் தாக்கியழித்தனர். அப்போது கடற்படையினர் டோராப் பீரங்கிப் படகுகள், நீருந்து விசைப்படகுகளில் அப்பகுதிக்கு வந்தனர். இவற்றுக்கு எதிராகவும் கடற்புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர். அந்தத் தாக்குதலின்போது 'டோராப்' பீரங்கிப் படகு ஒன்று கரையோர முருகைக்கற் பாறைகளில் மோதி முற்றாக சேதமடைந்தது.

மேலும் இரண்டு பீரங்கிப்படகுகள் சேதமாக்கப்பட்டன. இதனையடுத்து தளத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த கடற்புலிகள் அங்கிருந்த கடற்படையினரின் 50 கலிபர் துப்பாக்கி - 02, பி. கே. எல் எம் ஜி துப்பாக்கிகள் - 02, ஆர் பி ஜி - 01, ரி -56 ரக துப்பாக்கிகள் -02 உட்பட போர் ஆயுதங்கள், வெடிபொருள்கள் ஆகியவற்றைக் கைப்பற்றி வெற்றிகரமாக தளம் திரும்பியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் கடற்படைத் தளத்தில் கடற்படையினரின் 34 சடலங்கள் கிடக்கக் காணப்பட்டுள்ளன. இந்த எண்ணிக்கையை கடற்புலிகள் தளத்தில் இருந்து உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஸ்ரீலங்கா கடற்படையினரின் பெரும் பாதுகாப்புப் பகுதியில் உள்ள நெடுந்தீவு கடற்படை தென்பகுதித் தளத்தை கடற்புலிகள் தகர்த்து அழித்த தாக்குதலில் கடற்புலிகள் 4 பேர் வீரச்சாவடைந்துள்ளனர்.

- இவ்வாறு விடுதலைப்புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வாசுகி சிவநேசன்



சுவிஸைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வாசுகி சிவநேசன் 22.05.2007 செவ்வாய்க்கிழமை சுவிஸில் அகால மரணமானார்.

அன்னார் சிவநேசன்-கோசலா தம்பதியரின் பாசமிகு சிரேஷ்ட புதல்வியும் வாசன், வாகினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சரவணமுத்து-மகேஸ்வரி (சிறுப்பிட்டி) தம்பதியரினதும், காலஞ்சென்ற க.கந்தசாமி (ஆவரங்கால்) - மகேஸ்வரி (கனடா) தம்பதியரினதும் ஆசைப் பேர்த்தியும் காலஞ்சென்ற இராமநாதர் மற்றும் திருமதி இ.சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2007) வெள்ளிக்கிழமை சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.
தொடர்புகளுக்கு தொ.பே. இல: 004117092891

*சிறுப்பிட்டி,*
*நீர்வேலி.*
(60923)
*தகவல்:*
**சரவணமுத்து** *(பேரன்).*

## குட்டிப்பிள்ளை செல்வநேஸ்வரன் (இளங்கோ)



கல்வியங்காடு, கலைமகள் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட குட்டிப்பிள்ளை செல்வநேஸ்வரன் நேற்று (24.05.2007) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டிப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் மாணிக்கவாசர் - சர்வேஸ்வரி ஆகியோரின் மருமகனும் லோகதர்மினியின் (மணி) அன்புக் கணவரும் அனிதாவின் (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி, கலைப்பிரிவு) அன்புத் தந்தையும் சந்திரமலர் (கிளிநொச்சி), அரசேஸ்வரன் (ஆசிரியர்- யா/புத்தூர் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை), யோகேஸ்வரன் (ஜேர்மனி), மகேந்திரகுமார் (லண்டன்), சந்திரகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் சர்மிளா, புஸ்பவதி, நாகேஸ்வரி, ராகினி, லோகேஸ்வரன் (பிரான்ஸ்), இராதாகிருஸ்ணன் (கனடா), சண்முகராசா (துரை-சுவிஸ்), ஐங்கரன் (குட்டி-பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2007) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சொர்ணவடலி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*
*தகவல்:*
**மனைவி, மகள்.**

## திருமதி முருகேசு சிவபாக்கியம்



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகேசு சிவாக்கியம் நேற்று (24.05.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் முருகேசுவின் அன்பு மனைவியும் லீலாவதி (ஜேர்மனி), கனகரத்தினம் (கனடா), ரேவதி, விஜயகுமார் (சுவிஸ்), ரங்கன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), சியாமளா (கனடா), ஸ்ரீதரன் (சீராளன்), லதா (சுவிஸ்), ஜெயா (சுவிஸ்) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற பொன்னுத்துரை, அன்னம்மா மற்றும் கனடாவில் தற்சமயம் வசிப்பர்களான பூலோகம் (ஓய்வு பெற்ற சாரதி -விவசாயப் பகுதி), முருகேசு (ஓய்வு பெற்ற கணக்காளர்), பொன்னுச்சாமி (விளையாட்டுத்துறை அதிகாரி) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2007) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் பி.ப 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புளியங்கூடல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

***புளியங்கூடல் வடக்கு,***
***ஊர்காவற்றுறை.***
**குடும்பத்தினர்.**

## பண்டாரம் புவிராஜா



வளலாய், அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் பலாலி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பண்டாரம் புவிராஜா நேற்று (24.05.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசாலாட்சியின் அன்புக் கணவரும் பண்டாரம்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் இளையமகனும் பழனிவேல், காலஞ்சென்றவர்களான துரை, தர்மலிங்கம், சின்னம்மா, சின்னத்தங்கம், மாணிக்கம், பொன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஸ்ரீஸ்கந்தராஜா (ஆசிரியர்- யாழ்.மத்திய கல்லூரி), காலஞ்சென்ற ஸ்ரீசந்திரராஜா (முன்னாள் ஆசிரியர்- யாழ்.உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்) மற்றும் ஸ்ரீசுந்தரராஜா (மருந்தாளர், உரிமையாளர்- சுந்தர் வெளியீடு) ஆகியோரின் அன்புத் தந்தையும் சசிக்கா (ஆசிரியர்-யாழ்.மத்திய கல்லூரி), சுமதி (ஆசிரியர்-யாழ்.மத்திய கல்லூரி), சந்திரகுமாரி (ஆசிரியர்- தும்பளை சைவப் பிரகாச வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனும் சமித்யா, அருண்யா, ஸ்ரீவரன், பவித்திரன், ஸ்ரீகணா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (25.05.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்திலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*03, பலாலி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(60928)
*தகவல்:*
**பு.ஸ்ரீஸ்கந்தராஜா.**
*(மகன்)*


தமிழ் A/L

| | |
|---|---|
| 2008 பிரிவு I பிரிவு II (ஆரம்பத்திலிருந்து) | சனி/ஞாயிறு 3-4 மணி 1-2 மணி |
| 2009 | சனி/ஞாயிறு 2-3 மணி |

By:S.சிவா
SHAMROCK JAFFNA


# கொழும்பு துறைமுக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த பஸ் றெக்கிளமேஷன் வீதிவழியாக வந்துகொண்டிருந்த வேளை குண்டுத் தாக்குதலில் சிக்கியது. பஸ்ஸின் கண்ணாடிகள் நொறுங்கின. குண்டுச் சிதறல்கள் பஸ்ஸை துளைத்து சின்னாபின்னப் படுத்தின.

நான்கு படையினர், மூன்று பொது மக்கள் உட்பட காயமடைந்த ஏழுபேர் சம்பவ இடத்தில் இருந்து கொழும்பு தேசிய மருத்துவமனைக்குக் கொண்டு விரையப்பட்டனர்.

ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பஸ்ஸின் சாரதியான இராணுக் கோப்ரல் பின்னர் அங்கு உயிரிழந்தார். காயமடைந்த மற்றொரு படைச் சிப்பாய் ஆபத்தான கட்டத்தை தாண்டவில்லை என்று கொழும்பு மருத்துவமனை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புறக்கோட்டையில் அதிஉயர் பாதுகாப்பு வலயத்தினுள் இந்த வெடி குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

நேற்றைய குண்டுத் தாக்குதலை அடுத்து கொழும்பு நகரில் பாதுகாப்பு சோதனைகள் உடனடியாக அதிகரிக்கப்பட்டன.

(சி)


நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
விஜய், அசின், வடிவேல் நடித்த
(றீல்ஸ்) போக்கிரி
தினசரி : 11மணி, 3மணி. இறுதி வாரம்



SCC 55, Arasady Rd, Jaffna. T.P: 021 2225170
Dip. In Internet E-mail
Dip. In Microsoft Office
Dip. In Desktop Publishing
Start on: 26.28.05.2007

THE ROYAL COLLEGE OF JAFFNA
ஆண்டு 3, 4, 5 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு தமிழ், கணிதம், சுற்றாடல்,ஆங்கிலம் புலமைப் பரிசில் வகுப்புகள் சிறந்த ஆசிரியர்கள். BY: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 (302), K.K.S வீதி யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை.


## வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் தேவாலய பொதுக்கூட்டம் ஒத்துவைப்பு

மேற்படி தேவாலய புனருத்தாரணம் தொடர்பாக நாளை 26.05.2007 சனிக்கிழமை காலை நடைபெறவிருந்த பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

*புனித செபஸ்தியார்*
*தேவாலயம்,*
*வல்வெட்டித்துறை.*
**பங்குத் தந்தை**

## துயர் பகிர்வு

எமது கல்லூரியின் ஆசிரியர்
**பு.ஸ்ரீஸ்கந்தராசா** அவர்களின் அன்புத் தந்தையும் **திருமதி சசிக்கா ஸ்ரீஸ்கந்தராசா, திருமதி சுமதி ஸ்ரீஸ்கந்தராசா** ஆகியோரின் அன்பு மாமனுமாகிய
**பண்டாரம் புவிராஜா**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடை இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்/ மத்திய**
**கல்லூரி.**
**ஆசிரிய வட்டம்.**


## தேவை

யாழ்.நகரப் பகுதியில் இயங்கும்
* யாழ் பேபிநீட்ஸ் அன் பார்மஸி
* சன்றைஸ் மெடி கிளினிக்
ஆகியவற்றுக்கு பின்வரும் தகைமையுடைய பெண் பிள்ளைகள் தேவை
* கணனி இயக்குநர் (Computer Operater)
* மருந்து வியாபாரம் செய்பவர்கள்
* தாதிய உதவியாளர் (Nursing Assisent)
யாழ்.மாநகர எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
நேர்முகத் தெரிவு: 27.05.2007 (ஞாயிறு) மு.ப. 10 மணி
இடம்: **சன்றைஸ் மெடிகிளினிக்**
*388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*


**அராலி ஆவரம்பிட்டி**
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான
**அன்னதானசபை**

## முக்கிய அறிவித்தல்

**அம்பிகை அடியார்களே!**

**அன்னதான சபையின் பற்றுச்சீட்டு இன்றி எவரும் பணம் வழங்க வேண்டாம். கொடுக்க விரும்புவோர் நேரடியாக அன்னதான சபையினிடம் வழங்கிப் பற்றுச்சீட்டை உடன் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.**

*தலைவர்*
*ந.தருமராசா*
*செயலாளர்*
*க.வயித்திலிங்கம்*


DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING
உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு உங்கள் கணனிகளை நீங்களே அமைத்துக் கொள்வதற்கான 100% பயிற்சி நெறி
♦Chip & Card level Trouble shooting ♦Assembling ♦Variours Mother Board Handling ♦Upgrading ♦Fault Finding ♦Repairing ♦Servicing ♦Printer, Scanner & Com device management ♦Software Installation ♦Configuring Internet Interfacing & Trouble shooting ♦Networking & Etc...
ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தப்படும்.
பயிற்சிநெறி முடிவில் கம்பியூட்டர் ஹார்ட் வெயார் சம்பந்தமான பூரண அறிவைப் பெற்றுக் கொள்வதற்கான உத்தரவாதம்
ஆரம்பம் :- 26,28.05.2007
Softview Computer College
55, Arasady Road, Jaffna. T.P: 021 2225170


# மரண அறிவித்தல்கள்

## கிருஸ்ணன் சிவபாலன்

**(முன்னாள் எழுதுவினைஞர், மாவட்ட நீதிமன்றம், வவுனியா)**



பளையைப் பிறப்பிடமாகவும் நல்லூர் கொண்டலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கி.சிவபாலன் 23.05.2007 புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் கிருஸ்ணன்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இராசமலரின் அன்புக் கணவரும் சபேஸ்நாத் (லண்டன்), அருண்நாத் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சிவராசா மற்றும் சிவமலர்,சிவராணி, சிவநேசம் (பிரான்ஸ்), சிவகுமார் (பிரான்ஸ்), சிவநாதன் (ஜேர்மனி), சிவஞானம் (டாக்டர்- காசநோய் பிரிவு- நாரகென்பிட்டியா அரசினர் வைத்தியசாலை), சிவசோதி (லண்டன்), சிவதாசன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவபாக்கியம், சரோஜினிதேவி, சிவலிங்கம் (பிரதேச செயலகம், சங்கானை), மகாலிங்கம், இராசலிங்கம் (நீர்கொழும்பு), நேசமலர், சந்திரலிங்கம் (பிரதேச செயலகம் , வேலணை), ரவிச்சந்திரன், சசீந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2007) வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

***39, கொண்டலடி லேன்,***
***நல்லூர், யாழ்ப்பாணம்.***
*தகவல்:*
**மனைவி, பிள்ளைகள்.**

## சுப்பையா சதாசிவம்

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வதிவிடமாகவும் தற்போது இணுவிலை வதிவிடமாகவும் கொண்ட சுப்பையா சதாசிவம் 23.05.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா-பார்வதி தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பூபதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நடராசாவின் அன்புச் சகோதரனும் சிவலிங்கம் (கணக்காய்வாளர்-ஹற்றன்), சந்திரவதனா (ஆனைமடுவ), தயாளமலர் (கனடா), சுந்தரலிங்கம் (ஓம் சிவாஸ் ரேடிங் கொம்பனி -கனடா), தயாநிதி, தேவகி (இணுவில்), கருணா (கனடா), ஜெகதீஸ்வரி (ஹற்றன்), சிவநேஸ்வரலிங்கம் (ஓம் சிவா ரேடிங் கொம்பனி -கனடா), தேவறஞ்சினி (கனடா), சற்குணலிங்கம் (சுவிடிஸ்-ஹற்றன்) ஆகியோரின் தந்தையும் மனோரஞ்சிதம், சிவபாலசிங்கம் (VRS உரிமையாளர், ஆனைமடுவ), மகாலிங்கம் (கனடா), புஸ்பமலர் (கனடா), பரமேஸ்வரன் (இணுவில்), ஜெயபாலன் (கனடா), கருணாகரன் (சட்டத்தரணி-ஹற்றன்),சுகந்தி (கனடா), ஆனந்தராஜா (கனடா), சிவகௌரி (ஹற்றன்) ஆகியோரின் மாமனும் பிரணவன் (கனடா), பிரசாந் (B.Sc (Hon)), ரிஷிகேசன் (Mechanical & application.Eng), ஆரணி (Computre Eng.), கஜன் (CIMA Student), கஜானன் (CIMA Student), வாசுகி (ஒசாவா பல்கலைக்கழகம்), வாகீசன் (வாட்டலு பல்கலைக்கழகம்), துளசி (Political Science - London), துவாரகா (வாட்டலு பல்கலைக்கழகம்), வைஷ்ணவி,கணாதீசன், கார்த்திகன், மனோஜ், ஜனார்த்தனன், சாம்பவி, ஜாதவன், லக்ஷ்மி, மீனாட்சி, வர்மன், சிந்தூரா, ஆரூரன், ஆதித்தியா, சங்கவி, துஷ்யந்த் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
*சிவலிங்கம் (0512223788),*
*சுந்தரலிங்கம் (04163212739),*
*சிவனேஸ்வரலிங்கம் (04167543351),*
*சற்குணலிங்கம் (0779393132)*
*(பிள்ளைகள்).*

இணுவில் கந்தசாமி கோயில்
வடக்கு லேன்,
இணுவில் மேற்கு.

*இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நி[illegible]யில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.05.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org